# வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி : நுவரெலியா மாவட்டத்தின் ஹய்பொரஸ்ட் கிராமத்துக்கான ஓர் ஆய்வு

**அனுஜா ச., சுதாகர் க.**
புவியியற்றுறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.
anuja623kr@gmail.com

*வீடு என்பது அடிப்படை உரிமையாகும். வீடமைப்பானது மக்களுக்கான பாது காப்பை வழங்குவதுடன் அவர்களுடனான இட அமைப்பினையும், அந்தஸ்த்தினையும் ஏற்படுத்திக் கொடுப்பதில் பிரதான பங்கு வகிக்கின்றது. பொருளாதாரத்தின் முதுகெலும் பாக இருக்கின்ற பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வீடமைப்புத் திட்டங்கள் வெவ்வேறு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டாலும் அவர்களுக்கான வீடானது பூரணப்படுத்தப் படாமலும் இடையில் கைவிடப்படுகின்றமையினால் மக்கள் தொடர்ச்சியாக உட்கட்டமைப்பு வசதிகள் குறைந்த லயத்து வரிசை வீடுகளில் இன்றும் வாழ்கின்றார்கள். இலங்கையின் மத்திய மாகாணத்தின் நுவரெலிய மாவட்டத்தின் வலப்பனைப் பிரதேச செயலக பிரிவிலுள்ள ஹய்பொரஸ்ட் 504-*D *கிராம நிலதாரிப் பிரிவிற்குற்பட்ட கிராமத்தின் வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி பற்றி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. ஹய்பொரஸ்ட் கிராமமானது 670*km *ஏக்கர் பரப்பளவினை கொண்டுள்ளது. இங்கு 692 குடும்பங்களைக் கொண்டு மொத்தமாக 1055 மக்கள் தொகையினைக் கொண்டமைந் துள்ளது. வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதி வாய்ப்புக்களின் தற்போதைய நிலை யினை மதிப்பிடல். வீடமைப்பு மற்றும் உட் கட்டமைப்பு அபிவிருத்திக்கான தடைகளை அடையாளம் செய்து மதிப்பிடல். வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான உபாயத்தினை சிபாரிசு செய்தல் என்பவை ஆய்வின் நோக்கங்களாக அமைந்துள்ளன. இங்கு தெரிவு அடிப்படையில் 51 வீட்டுத்திட்டப் பயனாளிகளை* (GIS) *வரைபடமாக்கல் வழியாக ஆய்விற்காக அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். இங்கு வீடமைப்புத் திட்டங்களை முழுமைப்படுத்து வதற்குத் தடையாக போதியள வான நிதியின்மையும், காணியுரிமை யின்மையும் காணப்படு கின்றது இதனால் இவ்வீட்டுத்திட்டமானது தொடர்ச்சியாக பின் தள்ளப்பட்டுள்ளது. இங்குள்ள மக்கள் தொடர்ந்தும் உட்கட்டமைப்புக்கள் குறைந்தும், லயத்து முறையிலான வாழ்க்கை முறையிலும் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாய்வுக்காக முதலாம் நிலைத் தரவுகள் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளிடம் வினாக்கொத்து மூலமும், கிராம சேவகர், தோட்ட முகாமையாளர், தேசிய சமூக அமைப்பின் ஸ்தாபகர் மற்றும் பாடசாலை யின் அதிபர் போன்றோரிடம் நேர்காணல் மற்றும் நேரடி அவதானிப்புக்களினூடாக பெறப் பட்டது. இரண்டாம் நிலை தரவுகளாக இடம் சார் தரவுகள், கிராம சேவகர் அறிக்கை, தோட்ட முகாமையாளர் அறிக்கை மற்றும் நிதி அறிக்கை பாடசாலை மாணவர்கள் தொடர்பான அறிக்கைகள் மற்றும்* (PRA) *மக்கள் பங்குபற்றலுடனான தரவு சேகரிப்பு நுட்பங்களை பயன் படுத்தி சேகரிக்கப்பட்டன. அவை* Excel *மற்றும்* SPSS *ஊடாக பகுப்பாய்வு செய்யப் பட்டன. மேலும் பூரணப்படுத்தப்படாத வீடமைப்புத் திட்டங்கள் பூரணப்படுத்தப்பட்டு குறிப்பிட்ட பயனாளிகளின் கைகளில் ஒப்படைக்க வேண்டும், லயத்து வரிசை வீடுகளில் காணப்படுகின்ற வதிவிடத்திலுள்ள குறைந்த உட்கட்டமைப்பு வசதிகள் நீக்கப்பட்டு சிறந்த கட்டுமான பணிகள் இடம் பெற வேண்டும் என்பன முடிவுகளாகப் பெறப்பட்டுள்ளன.*

**திறவுச்சொற்கள்:** ஹய்பொரஸ்ட், லயத்து வரிசை வீடுகள்.வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி